18 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே"

வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 9-3-33

நிழலுக்கு காசு மாலை!



சுதந்திர தேவியின் உண்மை உருவத்தை அறிந்த தேச பக்தர்கள் அன்னையை அணுகவும், நன்மலர் தூவி அருச்சிக்கவும் விழைகின்றனர். ஆனால் அவர்களை ஏதோவொன்று தடுத்து நிறுத்தியுளது. அன்னையின் நிழல் கீழே படுகின்றதைக் கண்ட மிதவாதிகளின் தும்பல் "இதோ சுதந்திர நிழல்! அதற்கு ஆடையுடுத்தி காசு மாலை போட்டு அலங்கரிப்போம்!" என்று பேசத் தொடங்கி யிருக்கின்றனர். அலகாபாத்தில் சிந்தாமணி கோஷ்டியார் 'சுதந்திரம்' என்ற புனிதப் பெயரை அன்று உச்சரித்ததற்கு இதுதான் அர்த்தம்.

வீரர் மலைந்த நாடு

மாரத வீரர் மலிந்திருந்த நாட்டில், வில்லர் வாழ்வு குன்றியதும், வீர வாள் மாய்ந்ததும் வாஸ்தவமே. சகுந்தலை பெற்ற பிள்ளை பரதன் சிங்கத்தினைத் தட்டி விளையாடியதும் 'கதை' யென்று கூறுகிறார்கள். மூன்று நூற்றாண்டு கட்கு முன்னரே யிருந்த சிவாஜி, குரு கோவிந்த சிங், பாஜி முதலியவர் சரிதங்களும் பொய்யென்று இனி சொல்லி விடுவார்கள் போலும்!

'வீரம்' என்பது மருந்துச் சரக்கா, அல்லது மனித ஸ்வபாவமா வென்று கேட்கும் காலம் அணுகி யிருப்பதற்கு காரணம் யார்? ஆயுதச் சட்டத்தைப் போட்டு, பொது ஜனங்களிடம் வீர உணர்ச்சி தூங்குமாறு செய்திருக்கின்றது யார்? ஆயினும் சென்ற ஐரோப்பிய யுத்தத்தின் போது 'பிளாண்டர்ஸ்' போர் முனையில் எதிர்ப் பாய்ந்த இந்தியர்களின் வீரத்தை பிரிட்டிஷாரே கண்ணுறப் பார்த்ததுண்டு; புகழ்ந்ததுமுண்டு. அந்தப் புகழ் மொழிகளை யெல்லாம் மென்று விழுங்கி விட்டு புது மாதிரியான பேச்சைத் தொடங்கி யிருக்கின்றார் ஒருவர். அவர்தான் இந்திய ராணுவத்தின் சேனாதிபதியாயுள்ள ஸர் பிலிப் செட்வோடு என்பார்.

"போர்த் தொழிலில் தலைமை வகிக்கப் போட்டி போடும் ஸ்வபாவம் வம்ச பரம்பரையாக வரவேண்டியது. தற்காலத்தில் படித்தவர்களாகவும், வீர உணர்ச்சி உடையவர்களாகவும் இந்தியர்களில் ஆட்கள் கிடைப்பது அரிது. ஆதலால் தான் இராணுவத்தை இந்திய மயமாக்க முடியா திருக்கிறது" என்று ஓரிடத்தில் செட்வோடு உளறி யிருக்கின்றாராம்.

'வம்ச பரம்பரையான வீரம்' என்பதை உலகுக்கே போதித்தது பாரத நாடு தான். 'க்ஷத்திரிய மரபு' என்று ஓர் வம்சம், செட்வோடின் இங்கிலாந்து தேசத்திலிருக்கின்றதா? இவர் எந்த வீர மரபில் உதித்தாரென்று கேட்கிறோம். செட்வோடுக்கு ஒரு வார்த்தை. எவ்வளவு இடைஞ்சல்கள் இருந்த போதிலும் இந்தியர்களின் வீர உணர்ச்சி குன்றவில்லை யென்பதை தெரிவித்துக் கொள்கிறோம். வேணுமானால் இந்த செட்வோட் இந்திய இராணுவத்தை இந்திய மக்களிடை ஒப்படைத்து விட்டு இளைப்பாறட்டும். இராணுவம் இன்னும் மேன்மையாக நடக்கிறதா வில்லையா வென்பதைப் பார்க்கட்டும்.

சிரிப்பாய்ச் சிரிக்கிறதே

(சிரிக்கச் சிரிக்கப் பேசுவதில் பிரபுல்ல சந்திர ரே ரொம்ப கெட்டிக்காரர். அவர் டெல்லி ஸர்வ கலாசாலை மாணவர்கள் முன்பு பேசிய பேச்சின் ஓர் பகுதியைக் கவனியுங்கள்).

இந்தப் பஞ்ச காலத்திலே பட்டத்திற்காகப் படிக்கின்றீர்களே, இது தற்கொலை செய்து கொள்கிற மாதிரியே எனக்குத் தோன்றுகிறது. பட்ட வேட்டை யாடும் பித்தத்திற்கு என்னால் மருந்து கண்டு பிடிக்க முடிய வில்லை. பாசி படருவது போல எங்கு பார்த்தாலும் காலேஜுகள் ஜாஸ்தியாகி விட்டன. முத்திரை குத்திக் குத்தி பி. ஏக்கள் அந்த தொழிற் சாலைகளில் தயார் செய்யப் படுகின்றன. பட்டம் வாங்கியதும் கருப்புக் கவுன் போட்டுக் கொள்கிறீர்கள். உடம்பில் உள்ள மூடத்தனத்தை மூடிக் கொள்ள ஒரு துணி வேண்டியது தானே!

இப்போது பிரதம மந்திரியாயுள்ள மாக்டனால்டு சின்னப் பையனா யிருந்தபோது தோட்டங்களில் உருளைக்கிழங்குகளை நோண்டி யெடுத்து வயிறு வளர்த்தவன். எஜமான் அவன் கன்னத்தில் பளீர் பளீரென்று விட்டதுமுண்டு. மாக்டனால்டுக்கும் உங்களைப்போல பட்டதாரியாக வேண்டு மென்று ஆசை யிருந்ததாம். ஆனால் வெள்ளையப்பன் துள்ள வில்லை. பெர்னார்டு ஷா இருக்கிறானே அவனும் எந்த காலேஜிலும் படித்தவனல்ல.

K. T. ஷா சொல்கிறபடி கல்கத்தாவில் ஒவ்வொரு லாயரும் மாதா மாதம் சராசரியில் 20 ரூபாதான் சம்பாதிக்கிறான். ஆனால் லாயர் என்ற சாமான் ஏராளமாகத் தயாராகிக் கொண்டே யிருக்கிறது. என்னை ஒரு நாள் இந்தியாவின் சர்வாதிகாரியாக ஆக்குவார்களானால் இந்த லா காலேஜுகளை இடித்துத் தர மட்ட மாக்குவதே எனது முதல் வேலை!

இன்னும் கொஞ்சம் காசுக் கொழுப்பிருந்தால் அந்நிய நாடுகளுக்குச் சென்று பி. எஸ்ஸி., எம். எஸ்ஸி. பட்டம் விலைக்கு வாங்க ஓடுகிறார்கள். அந்நியப் பட்டத்துக்கும் இந்திய நிலைமைக்கும் ஏதாவது சம்பந்த முண்டா? இரவல் இறகுகளைச் சொருகிக் கொண்டு குதிக்கும் பக்ஷிகளையும், இரவல் புடவையைக் கட்டிக் கொண்டு மினுக்கும் பெண்டிரையும், பொருட்படுத்தலாமா? அதே மாதிரி தான் அந்நிய நாட்டுப் படிப்பு படித்துவிட்டு வருகிறவர்களையும் நாம் கருத வேண்டும். (சிரிப்)

நீளுதே ரப்பர் போல!

இந்த வருடத்தோடே டெல்லி சட்ட சபையின் ஆயுள் முடிவடைய வேண்டும். இப்போதுள்ள 'அமிஞ்சி' அங்கத்தினர்கள் இருந்தும் ஒன்று தான்; இல்லாத போனாலும் ஒன்று தான். ஆனால் செத்துப்போக வேண்டிய சட்ட சபையின் ஆயுளை வைஸ்ராய் நீட்டி விட்டார். எவ்வளவு நீளமென்பதைக் கூடச் சொல்லவில்லை. சமீபத்தில் தேர்தல் நடந்தால் இப்போதுள்ளது போல 'நல்ல பிள்ளைகள்' வருவார்களா வென்பது சந்தேகம் தானே! புதிய சீர்திருத்தம் வருகின்ற காலம் வரை இந்தச் சபை சிரஞ்சிவியாக இருக்க வேண்டுமென வைஸ்ராய் உத்தரவு போட்டிருக்கிறார். வைஸ்ராய் வைத்ததுதானே சட்டம்! சட்ட சபை ரப்பர் நீண்டு விட்டது. இப்போதுள்ள அங்கத்தினர்களை அவமானம் செய்யவே இந்தக் காரியம் செய்யப் பட்டதோ என்னவோ? சுய மரியாதையோடு ஒருவன் சட்ட சபையில் இருப்பானானால் ராஜினமா செய்து விட்டு வரட்டும் பார்ப்போம்!

கூட்டுக்கு காய் கறி

கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டி என்று ஓர் 'ஹம்பக்' கூட்டம் சீமைக்குப் புறப்படப்போகிறதென்று முன்னமேயே சங்கில் பிரஸ்தாபித்திருக்கிறோம். அந்தக் கூட்டைத் தயார் செய்ய காய்கறிச் செலவு அபாரமாயிருக்கு மென்று தெரிகிறது. அதற்காக சுமார் 2 லக்ஷத்து 14 ஆயிரம் ரூபாய் அனுமதிக்க வேண்டுமென்று சர்க்கார் கோருகின்றனராம். என்ன அநியாயம்! என்ன செலவு! யார் பணம்?

கண்ணாடியும் காந்தியும்

மூக்குக் கண்ணாடி போட்டுக் கொள்ளும் வழக்கத்தைக் காந்திஜி விட்டு விடப் போகிறாராம். தமது கண்ணுக்கு பல வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட கோளாறை இயற்கை வைத்திய வழியாகப் போக்க முடியுமோ வென்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். ராஜீயம், மதம், ஆரோக்கிய ஆகாரம் முதலியவைகளில் ஆராய்வது போதாதென்று இப்போது இந்தக் கிழவர் கண் வைத்திய ஆராய்ச்சியிலும் இறங்கி யிருப்பது வேடிக்கையே!

உலகின் பெரியார்கள்

சீனாவிலுள்ள ஒரு பெரிய பத்திரிகையின் வாசகர்கள் 'உலகின் பெரியார்கள்' யாரென்பதை நிர்ணயிக்க வோட்டு கொடுத்தார்கள். அதில் மகாத்மா காந்திக்கே பெரும்பான்மையான வோட்டுகள் கிடைத்தது பற்றி உவகையடைகிறோம். ஓட்டு விபரப்படி பெரியார் வரிசை பின்வருமாறு:—

மகாத்மா காந்தி	(உலகின் புருஷோத்தமன்)
முஸ்ஸோலினி	(இத்தாலிய சர்வாதிகாரி)
ஈன்ஸ்டின்	(ஜர்மன் அறிஞர்)
ஸ்டாலின்	(ருஷியத் தலைவன்)
கமால் பாஷா	(துருக்கி அக்ராஸனர்)
பெர்னார்ட் ஷா	(ஆங்கில அறிஞர்)
திரோத்ஸ்கி	(ருஷியாவிலிருந்து துரத்தப் பட்டவன்)

வெள்ளைக் கடுதாசி 'ஹம்பக்'

குழந்தைகள் விழித்துக் கொள்வது போல மிதவாதக் கும்பல் கண்களைத் திறக்க ஆரம்பித்திருக்கின்றது. காந்தியடிகளையும், காங்கிரஸையும் திட்டுவதே தொழிலாகக் கொண்டிருந்த கூட்டம் இப்போது பிரிட்டிஷாரின் வெள்ளைக் கடுதாசி சூழ்ச்சியின் அந்தரங்கத்தை அறிந்து கொள்ள முயல்கின்றது.

"வெள்ளைக் கடுதாசி என்றால் வெள்ளையர்களுக்கு சாதகமானது என்று அர்த்தமா? இந்தியர்களான கறுப்பர்களுக்கு அதில் ஏதுமில்லையா?" என்று நாராயண பிரசாத் என்பார் வெகு அழுத்தமாக, அலகாபாத்தில் ஒரு கூட்டத்தில் பேசினாராம். அதே கூட்டத்தில் மிதவாதக் கும்பலின் மணி போன்ற சிந்தாமணி, "சுதந்திரத்தின் 'ஸத்து' கிடைக்காத போனால் வெள்ளைக் கடுதாசியை இந்தியர் சீண்டுவானேன்? தோரணையைப் பார்த்தால் இந்தியர்களுக்கு எந்த அதிகாரமும் தருவதில்லை என்ற நோக்கத்தோடேயே சீமையில் வேலைகள் நடக்கின்றன" என்று அக்கூட்டத்தில் கதறினாராம். இந்தப் பேச்சுகளுக்கெல்லாம் பிரிட்டிஷ் சூழ்ச்சி மசிந்து விடாது. 'சொல்லான் முழக்கிலோ சுகமில்லை' என்ற வரியை அவர் உணர வேண்டும். இனி சர்க்காருடைய அரசியல் முயற்சிகளுக்கு சிந்தாமணி, செத்தல்வாடு, ஸாப்ரூ கும்பல் உதவி மறுக்க வேண்டும். அவ்வாறு விலகி நிற்பார்களா?

சர்க்காருக்கு எச்சரிக்கை

ஜப்பான் வர்த்தகர்களின் சாமர்த்தியம் சீனாவில் பலிக்க வில்லை. சீனாவில் பகிஷ்கார இயக்கம் அவ்வளவு மும்முரமா யிருக்கிறது. சீனாவிலுள்ள ரிக்ஷாக் காரர்கள் கூட இந்த பகிஷ்கார இயக்கத்துக்கு பலமாக பிரசாரம் செய்கிறார்கள். ஆகவே ஜப்பான் தனது சரக்கு களை இந்தியாவில் கொண்டு வந்து தள்ளி, ஒன் றுக்குப் பாதி விலையாக்கி விற்று, இந்திய சுதேசி இயக்கத்தைக் கொன்று கொண்டிருக்கிறது. ஜப்பான் சாமான் இறக்குமதி எந்தெந்த ரகங் களில் உயர்ந்திருக்கிற தென்பதைக் காட்டும் புள்ளி விவரங்களைக் கீழே கூறுகின்றோம்.

	1931ஞு	1932ஞு
சோப்பு	29	67
பருத்தி நூல்	4951	13777
பருத்தித் துணி	45190	73114
துண்டுகள்	403	805
கம்பளித் துணி	56	539
பட்டுச் சரக்கு	19276	29117
பொத்தான்கள்	283	561
குடைகள்	45	202
புருஷ்கள்	55	143
விளக்குகள்	282	777
விளையாட்டு சாமான்	679	1458

மேலே காட்டப் பட்டுள்ள கணக்கில் ரூபா அணு பைசாக் கணக்கு கொடுக்கப்பட வில்லை. கணக்கு எவ்வளவு உயர்ந்திருக்கிறது என் பதையே அது காட்டுகின்றது. உதாரணமாக குடைகள் 1931-ல் 45 பெரிய பேல் வந்தன; 1932-ல் 202 பெரிய பேல்கள் இறக்குமதியா யிருக்கின்றன. பொத்தான்கள் 1931-ல் 283 பெட்டிகள் வந்தன. 1932-ல் 561 பெட்டிகள் வந்திருக்கின்றன வென்று அறிய வேண்டும்.

ஜப்பான் சாமான் இறக்குமதி ஏற ஏற இந் திய சுதேசித் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக இறப்பதற்கு ஆரம்பமா யிருக்கிறது. பம்பாயில் இராப்பகலாக வேலை செய்து கொண்டிருந்த சுதேசித் துணி ஆலைகள் ஒவ்வொன்றாக மூடப் பட்டு வருகின்றன. இந்த முக்கியமான விஷ யத்தில் துரைத்தனத்தார் தலையிடா விட்டால் தேசத்துக்கு ஏற்படும் கஷ்டம் அபாரமா யிருக்கு மென்பதை இப்பொழுதே எச்சரிக்கை செய்கின்றோம்.

தங்கம் தில்லாலே !

சென்ற பத்து வருஷங்களாக தங்கம் இந்தி யாவில் இறக்குமதி யாகிக் கொண்டிருந்தது. 1922-ம் ஞுத்திலிருந்து 1931-ம் ஞுத்துக் குள் மொத்தம் 430 லக்ஷம் அவுன்ஸ் எடை யுள்ள அன்னியத் தங்கம் இந்தியாவில் இறக்கு மதியாகி யிருக்கிறது. ஆனால் சென்ற 15 மாதங்களுக்குள் தங்கம் இந்தியாவினின்று போய்க் கொண்டே யிருக்கிறது. மொத்தம் 150 லக்ஷம் அவுன்ஸ் போயிருக்கிறது. இந்தக் கணக்கின் மீது இந்திய பொக்கிஷ மந்திரி ஸர் ஜார்ஜ் ஷுஸ்டருடைய அபிப்பிராயம் என்ன தெரியுமா? “ஆகவே இன்னும் மூன்று பங்கு தங்கம் ஏற்றுமதி யானாலும் இந்தியாவுக்குள் நுழைந்த தங்கம் வெளியேறுமே யன்றி இந்தி யாவுக்கு நஷ்டமில்லை” என்று அன்று கூறினர்.

ஏதோ பத்துப் பதினேறு வருஷங்களின் கணக்கை யெடுத்துக் கொண்டு இந்த ஷுஸ் டர் ‘கதை’ பண்ணுகிறாரே யன்றி சென்ற 150 வருடக் கணக்கை எடுத்துப் பார்க்கிறா ரில்லை. ஆங்கில அரசு ஸ்தாபிக்கப்பட்ட தினத் தினின்று எவ்வளவு தங்கம் இந்தியாவை விட்டு வெளியேறி யிருக்கிற தென்பதை எண்ணும் போது இந்தியன் மனது பகிரென்னும். கவர் னர் ‘நவாபு’களும், வர்த்தக கம்பெனிகளும் இந்தியத் தங்கத்தைச் சுறண்டிய கதைகளைப் பற்றி ஷுஸ்டர் மறந்து விட்டார் போலும். அவருக்கு சாதகமாக ஏதோ பதினேரு வரு ஷக் கதையை எடுத்துக் கூறுவதால் டெல்லி சட்ட சபையிலுள்ள பேர்வழிகளை ஏமாற்ற லாமே யன்றி உலகை ஏமாற்றி விட முடியாது.

ஆலோசித்துப் பார்த்தால் ஏழை இந்தியனு க்கு இந்த 150 லக்ஷம் அவுன்ஸ் தங்கமும் நஷ் டம் தான். உதாரணமாக பெண்டாட்டி நகையை இக்காலத்தில் விற்கின்றானே, அவன் விற்றதற்குப் பதிலாக ஏதாவது சாமான் அவ னது வீட்டுக்குள் நுழைகின்றதா?

அமெரிக்காவில் சென்ற சில தினங்களாக தங்க ரகளை நடக்கின்றது. அங்கு பாங்கிகளை தாற்காலிகமாக மூடி வைத்தது மின்றி “அமெரிக்காவிலுள்ள தங்கம் எக்காரணம் பற் றியும் வெளியேறலாகாது” என்று அமெரிக்க சர்க்கார் உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்தியாவிலோ தேசிய தங்கத்தை நாளுக்குநாள் இழந்து கொண்டு நாம் ‘தங்கம் தில்லாலே’ பாடிக் கொண்டிருக்கிறோம். தங்க ஏற்றுமதியை தடுப்பாரில்லையே என் செய்வது?



"ஹரி ஜனம்"

ஸ்ரீயுத பரத்கர் என்ற மகாருஷ்டிர கலைஞானி நூல் ஒன்றைப் பிரசுரித்து வருகிறார். காந்திஜிக்கு அவர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"ஹரிஜனம்" என்ற வார்த்தையை ஏற்கனவே குஜராத்தியக் கவிஞர் ஒருவர் உபயோகித் திருப்பதாகத் தாங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். அதே வார்த்தையை, 'மோரோபந்த்' என்ற புகழ் வாய்ந்த மகாராஷ்டிரக் கவிஞரும் ஓரிடத்தில் உபயோகித் திருப்பதை அவர் நூல்களை ஆராயுங்கால் நான் கண்டேன். மேற்படி கவிஞர் ஒரு உத்கிருஷ்டமான பிராம்மணராயிருந்து அந்த மொழியைச் சிலாகித்து உபயோகித் திருப்பதிலிருந்து, அக்காலத்திலேயே தாழ்த்தப் பட்டவர்களின் முன்னேற்றத்தில் அவர் கொண்டிருந்த சிரத்தை நமக்குப் புலப்படுகின்றது."

இதுபற்றி மகாத்மாஜி "ஹரிஜனம்" என்ற பத்திரிகையில் எழுதி யிருப்பதாவது :

இதர மகாராஷ்டிரக் கவிஞர்களின் நூல்களிலும் இத்தகைய அத்தாக்ஷிகளை நாம் காணலாம். அவர்களை மட்டும் சொல்வானேன்? இந்தியக் கவிஞர்களின் நூல்கள் யாவற்றையும் ஆராய்ந்தால் இது சம்பந்தமான உண்மைகள் எவ்வளவோ புலப்படும்? ஆங்காங்குள்ள ஊக்கம் மிகுந்த பண்டிதர்கள் இவ்வாராய்ச்சித் துறையி லிறங்கி, தீண்டாமை விலக்கு இயக்கத்தில் ஈடு பட்டிருப்பவர்களுக்கு உதவியாக இருப்பவைகளைத் திரட்டித் தருவார்களானால் அவற்றை "ஹரிஜனி"ல் பிரசுரிக்க நான்ஏற்பாடுகள் செய்வேன்.

ஒதுக்கியதன் பலன்கள்

(மகாத்மா காந்தி)

தீண்டாமை விலக்கு வேலையில் ஈடுபட்டுள்ள தொண்டர் ஒருவர் ஹரிஜனங்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார். அவர் மனங் கசைந்து எனக்கு எழுதி யிருப்பதாவது :

"ஹரிஜன வீட்டின் ஒரு தாழ்வாரத்தில் நான் பள்ளிக்கூடத்தை நடத்தி வருகிறேன். பிள்ளைகளில் சிலரைப் பார்ப்பதற்குக் கூடப் பிடிக்க வில்லை. அவ்வளவு அசுத்தமாக இருக்கின்றனர். மூக்கிலிருந்து சளி வழிந்த வண்ணமிருக்கிறது. கண்ணிலுள்ள புளிச்சைக்கோ அளவில்லை. எங்கே வேண்டுமானாலும் அவர்கள் எச்சல் துப்புகிறார்கள். அவர்களது உடம்பு அழுக்கைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. துணியும் அதே கதி தான். பாடம் சொல்லிக் கொடுக்கையில் கூட அவர்கள் என்னத்தையாவது தின்று கொண்டிருக்கிறார்கள். ஆதலால் சுகாதார முறைகளைப் போதித்து வருவதையே நான் முதலில் கவனிக்கிறேன்.

"பள்ளிக்கூடத்தை நானே பெருக்குகிறேன். என்ன பேச்சு! என்ன சோம்பேறித் தனம்! 'பொறுமை' என்பதை நான் இங்கு கற்றுக் கொள்கிறேன். பிள்ளைகள் எடுத்ததற்கெல்லாம் பொய் சொல்லுகிறார்கள். வெளியில் எந்தப் பக்கம் பார்த்தாலும் ஒரே மலம். அதிலும் காலை வேளைகளில் கால் வைக்க முடிய வில்லை. ஹரிஜனங்களின் வீடுகளோ இருட்டுக் குகைகள் தான். இந்த தேசத்தில் சூரியன் என்னும் தோட்டி மாத்திரம் இல்லாவிட்டால் ஒரேநாளில் நாடு நாற்ற மெடுத்துப் போகும். இவ்வளவு கஷ்ட மிருந்தபோதிலும், இந்தத் தொண்டு தான் எனக்குச் சந்துஷ்டியைக் கொடுக்கின்றது."

நம்மில் ஒரு பகுதியினரை ஒதுக்கித் தள்ளி விட்டதால் ஏற்பட்டுள்ள பலன்களை இந்தக் கடிதம் எடுத்துக் காட்டுகின்றது. ஒவ்வொரு ஹரிஜனக் குழந்தையும் சுத்தமான வாழ்க்கையை நடத்தி, ஒழுங்காகப் படித்து முன்னுக்கு வர வேண்டு மென்பதற்காகவே நாம் பாடு படுகிறோம். இவர்கள் எல்லாரும் பொதுப் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படிக்க வேண்டும். ஆனால் அதற்கு முன்னால் அவர்களுக்காக நாம் சிறு பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தி, அவர்களது வாழ்க்கையைத் திருத்துவது நல்லது.

—"ஹரிஜனம்"

பகிஷ்கார பயமுறுத்தல்

ஒரு கிருபர் எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருக்கிறார். அதன் சுருக்கம் பின் வருமாறு:—

"ஜாதி ஹிந்துக்களாகிய நாங்கள் பீஹார் கிராமங்களிலுள்ள சில கிணறுகளை ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடுமாறு வெகு தூரம் சிரமப்பட்டு முயற்சி செய்து, காரியத்தைச் சாதித்தோம். ஆனால் பிறகு அருகிலுள்ள பிராம்மணப் பூசாரிகள் கோயில் பூஜையைத் தாங்கள் நிறுத்திவிடப் போவதாகப் பயமுறுத்துகின்றனர். இந்த ஊர்களிலுள்ள ஜனங்களின் வீடுகளில் கல்யாணங்களோ, சிரார்த்தங்களோ, இதர சுப காரியங்களோ ஏற்பட்டால் அப்பொழுது தாங்கள் வந்து அவற்றை நடத்தி வைக்க முடியாதென்று பிராம்மணர்கள் கூறுகின்றனர். இதனால் கிராம ஜனங்கள் பயந்து விட்டார்கள். சத்தியாகிரகத்திலிறங்கும்படி என் மனது தூண்டுகிறது. இந்தத் தூண்டுதல் கோபத்தாலுண்டானதாக விருக்கலாம் என எண்ணி நான் அவ்விதம் செய்யவில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் என்ன செய்வது?"

சில மாதங்களுக்கு முன்பு திருச்சிக் கருகிலும் இதே மாதிரி ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அப்பொழுது டாக்டர் ராஜன் வெகு நேர்மையுடன் நடந்து கொண்டார். பிறப்பினால் பிராம்மணரும், ஊழியத்தால் சூத்திரருமான ராஜன், ஒரு சீர்திருத்தக்காரரின் குடும்பத்தில் ஏற்பட்ட மரணத்தில் உத்தரக்கிரியைகளைச் செய்ய மறுத்த வைதிகப் பிராம்மணர்களை எதிர்த்தார்.

இம்மாதிரி சந்தர்ப்பங்களில் சத்தியாகிரகம் செய்வதற்கே இடமில்லை என்பது எனது கருத்து. தீண்டாமையைப் பாவமாகக் கருதுகிறவர்கள், பகிஷ்காரத்தையும், இன்னும் இதர கஷ்டங்களையும் அனுபவிக்கத் தயாராக யிருக்க வேண்டும். வெளி வேஷமாகவுள்ள காரியங்களை விட்டொழிக்க சீர்திருத்தக்காரர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். ஆண்டவன் பெயராலும், அவருக்காகவும் செய்யப்படும் எந்தக் காரியத்திற்கும் ஒரு புரோகிதர் வேணுமென்ற அவசியமில்லை. அவரவர்களது பரம்பரை முறையைத் தழுவி, யார் வேண்டுமானாலும் புனிதமான மந்திரங்களை உச்சரித்து ஒரு கல்யாணத்தை முடிக்கலாம். கடவுளை எந்தப் பெயரிட்டழைத்தால் என்ன? ஹிருதயத்திலிருந்து நேராகக் கிளம்பும் நாமத்தைச் சொல்லி நாம் அவரை அழைக்கலாம். ஆனால் அசைக்க முடியாத மனோதிடமும், நம்பிக்கையும், உள்ளவர்களாலேயே இங்ஙனம் செய்ய முடியும்.

—"ஹரி ஜனம்"

கடைசி ஆயுதம் எது?

"சாகும் வரையில் பட்டினி கிடப்பேன்" என்று தாங்கள் உறுதி கொள்ளுவதைக் காண்கையில் தெரிந்தோ, தெரியாமலோ தாங்கள் அஹிம்ஸையில் நம்பிக்கை யிழந்து வருவதாக எங்களுக்குத் தோன்றுகின்றது. தங்களிடமிருந்தே எங்களுக்கு அஹிம்ஸையில் நம்பிக்கை யுண்டாயிற்று; ஆகவே இது விஷயத்தைத் தாங்கள் எங்களுக்கு விளக்குவீர்களா?"

என்று ஒரு ஊழியர் எனக்கு எழுதுகிறார். என்னிடமிருந்தே தாங்கள் அஹிம்ஸையில் நம்பிக்கை கொண்டதாகக் கூறுவது என்னை முகஸ்துதி செய்வதாக இருக்கிறது. ஆனால் அஹிம்ஸா தர்மத்தின் சக்தி பூராவையும் அவர்கள் தங்கள் நாடி, நரம்புகளுக்குள் ஈர்த்துக் கொள்ளாமலும், அது அவர்களது வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாக ஏற்படாமலும் இருக்குமானால் நெருக்கடியான சமயத்தில் என்னால் அவர்களுக்கு யாதொரு நன்மையுமேற்படாது என நான் எச்சரிக்கை செய்கிறேன். ஒரு மனிதனிடத்தில் வைக்கும் 'அன்பு' அழியும் தன்மை வாய்ந்தது. ஏனெனில் ஜனங்கள் தாங்கள் எவரைத் தெய்வமாகக் கொண்டாடுகின்றனரோ அவர், தாங்கள் எதிர்பார்க்கும் நிலைக்கு வரவில்லையென்றால், உடனே அவர் மீது அவர்கள் வைத்திருந்த அன்பு புகை மாதிரி மறைந்து விடுகின்றது. ஆனால் மனிதர்களைப் பற்றி நாம் அக்கரை கொள்ளாமல் அவர்களது கொள்கைகளில் நம்பிக்கை வைக்க ஆரம்பித்து விட்டால் அந்த நம்பிக்கையே மிக நெருக்கடியான சமயங்களில் நமக்கு உறுதி யூட்டுகின்றது.

ஆகவே "சாகும் வரையில் பட்டினி" கிடக்க நான் முற்பட்டது அஹிம்ஸையில் நான் நம்பிக்கை யிழந்ததால் அல்ல; ஆனால் அந்த நம்பிக்கையை மேன்மேலும் உறுதிப் படுத்துவதற்கேயாகும். பிராணத் தியாகம் செய்வதே ஒரு அஹிம்ஸா தர்மியின் கடைசியான ஆயுதம். ஆகவே தீண்டாமையை யொழிக்கும் இந்த மதப் போராட்டத்தில் தொண்டர்கள் முக மலர்ச்சியுடன் உயிரையும் விடத் தயாராக விருக்க வேண்டும். செப்டம்பர் மாதத்தில் செய்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்க வேறு வழியில்லையென்றால் அஹிம்சா தர்மியின் கடைசி ஆயுதம் பிராணத் தியாகமே!

—"ஹரி ஜனம்"

எல்லோரும் ஏக லாட்ரி

ரயில்வே போர்டர் :—"என்னப்பா! காலம் கெட்டுப் போச்சு. மூட்டேங்களையும் காணோம். அப்படியே வந்தாக்கா அவனவன் மூட்டேயே அவனே தூக்கிக்குட்டு போயிடறான். சே! இதை விட எங்கேயாவது ஒரு வெத்திலே பாக்கு கடே வச்சிக்குனு குந்திக்கின நல்ல துன்னு எண்றேன்."

வெற்றிலே பாக்கு கடைக்காரன் :—"ஊர் புகைஞ்சு போச்சுதா என்ன? ஒரு நாளைக்கு ஒண்ணற ரூபாய் யாவாரத்தையே காணோமே. வெத்திலே பாக்குலே கூட இப்படி லோபம் செய்றாங்களே. சோடா புட்டீங்க தூங்குதே! இதை விட ஒரு ஜட்கா வண்டி வச்சுப் பிழைக்கலாம் போலிருக்குதே."

ஜட்கா வண்டிக்காரன் :—"நம்ப பிழைப்பிலே மண் வியுந்துது பிள்ளாய். அவனவன் கால் நடையைக் கட்டி விட்டுக்குனு இருந்தா என் குடும்பம் எப்படி பிழைக்கும்! குதிரே என்னத்தைத் துண்ணும்? வண்டி, குதிரே, எல்லாத்தையும் ஒழிச்சூட்டு மோட்டார் டிரைவராப் போனாலும் தேவலே. ஒரு நாளைக்கு 2 ரூபா கூலி வடை போல கிடைக்காதா?"

மோட்டார் ஓட்டுபவன் :—"தொண்டைத் தண்ணிதான் வத்துது கூச்சல் போட்டு. பேர்ட்டா போட்டி வலுத்துப் போச்சு. வாய்க்கரிசி போடற செலவு ஒய மாட்டே னென்கிறது. பெட்ரேல் விலேயோ குறைஞ்சு தில்லே. ரஷியாவிலிருந்து வருது வருது என்னுங்க. எல்லாம் வ்ளப்பனுய்த் தானிருக்குது. இதை விட எங்கேயாவது ஒரு க்ஷவர ஸலூன் வச்சுக்கலாம்னு எண்றேன்."

க்ஷவர ஸலூன் :—"என்ன இப்படி எல்லாரும் கஞ்சத்தனம் பண்றாங்களே. அவனவன் மூஞ்சியை அவனே சிறைச்சுக்கிறானே நாங்க என்ன செய்யறது. ஒத்தன் இரண்டு பேர் வந்தாலும், "நாளைக்குத் தர்ரேன்" என்று சாக்குச் சொல்லி நழுவுகிறார்களே என்ன செய்யறது. தாடி மீசை வச்சுக்கிறது நல்ல ஷோக்குனு நினச்சுக்குராங்களோ என்னமோ! நானு இங்கிலீஷ் படிச்சிருந்தா இப்படி நான் தவிக்கவாண்டா மில்லியோ?"

மாஜி கிளார்க்கு :—"அப்ளிகேஷன் போட்டுப் போட்டு கையலுத்துப் போச்சுது. ரிட்ரஞ்ச்மெண்ட் என்று கல்தா கொடுத்து விட்டார்கள். இங்கிலீஷ் படிப்புக்கு இவ்வளவு தான் யோக்யதேன்னு இப்போது தான் தெரியுது. பாவி, எங்கப்பன் ஒரு லாயராகவாவது ஒரு டாக்டராகவாவது படிக்க வைச்சானு வென்று நினைச்சதுண்டு. லாயர்களும் டாக்டர்களும் அடிக்கிற லாட்ரியில் நான் எந்த மூலை. சட்டையை யெல்லாம் கழற்றி எறிந்துவிட்டு சந்திப் பிச்சை யெடுக்கலாம்னு தோன்றது"

பிச்சைக்காரன்:—"கலி முத்திப் போச்சு. தர்மஞ் செய்யறவர்களையே காணோம். நான் பஞ்சத்துக்கு ஆண்டியில்லே. பரம்பரை யாண்டி. எங்கப்பாரு காலத்திலே ஒரு தெரு போனக்கே போது மென்பாரு. ஊர் முழுக்க சுத்தினலும் ஒரு வேளை சாப்பாட்டுக்கு வழியில்லியே! இனிமேல் சமுத்திரத்திலே விழுந்து சாக வேண்டியது தான் போலும்! ஈசா எப்போது வெடியுமோ?"

துப்பாக்கி முனையில்

"துப்பாக்கி முனையைக்காட்டி மிரட்டி நாம் இந்தியாவில் லங்காஷயர் துணிகளை விற்க முடியும். அல்லது இந்தியாவிடம் நாம் வாங்கிக் கொள்ளும் சாமான்களை யெல்லாம் தேயிலையுள்பட பகிஷ்கரிக்க வேண்டும். இச் சமயத்தில் லங்காஷயருக்கு உதவி செய்யாவிட்டால் வம்பு செய்வோம்" என்று ஸர் வால்டர் ஸ்மைல்ஸ் என்ற ஓர் பார்லிமெண்டு பித்தன் பிதற்றியிருக்கிறான். பிரிட்டிஷ் துணிகளைத் துப்பாக்கி முனையில் விற்றால்தான் இனிமேல் விற்கக் கூடுமென்ற முடிவுக்கு இந்தப் பேர்வழி வந்திருப்பதைப் பார்த்தால் பிரிட்டிஷ் வியாபாரம் எவ்வளவு படுத்துப்போயிருக்கிறதென்பது நன்கு விளங்குகிறது. ஆனல் இந்தியாவின் தேயிலையையும் பகிஷ்காரம் செய்யப் போகிறானாம். அப்படியே செய்யட்டும்! இந்தியாவில் தேயிலைத் தோட்டங்களின் முதலாளிகள் பெரும்பாலோர் வெள்ளைக்காரர். தேயிலையை ஆங்கிலேயர் பகிஷ்கரித்தால் யானை தன் தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொள்வது போல தங்கள் ஜாதியாரையே கெடுத்ததாக முடியுமன்றோ! ஐயோ பாவம்! ஆத்திரத்தில் ஸ்மைல்ஸ் உளறியிருக்கிறான். ஆத்திரக்காரனுக்கு புத்தி எத்தனை கஜம்?

இல்லறமும் பிரும்மசரியமும்

மகாத்மா காந்தி எழுதியது

(சங்கு ஸுப்ரஹ்மணியன் மொழிபெயர்த்தது.)

(தபாற்கூலி உள்பட 7 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.)

பொறுக்கிய புஷ்பங்கள்

கள்ளிக்கோட்டையில் சில காங்கிரஸ் தொண்டர்கள் பொது ஜனங்களுக்கு காங்கிரஸ் காலணு கார்டும், அரையணுக் கவரும் விற்றனராம். சில விடங்களில் தபால் பட்டு வாடா கூடச் செய்யப் பட்டதாம். காந்தி தினக் கொண்டாட்ட சம்பந்தமாக ஊர்வலம் நடத்தியபோது போலீசார் வந்து பிரம்பினால் அடித்தும் கூட்டம் கலையாததால் 20 தொண்டர்களைக் கைது செய்தனர்.

கண்ணனூரில் 'யூனியன் ஜாக்' கொடியை எரித்ததற்காக 14 பேர் கைதி யாயினர்.

கான்பூரில் காந்தி தின சம்பந்தமாக நகரெங்கும் கதவடைப்பு நடந்தது. கடைகளில் மறியல் செய்ததற்கும், துண்டுப் பிரசுரம் வழங்கியதற்கும் மூவர் கைதியானார்கள்.

டெல்லியில், விடுதலை யாகிவந்த ஒரு முஸ்லீமுக்கு 24 மணி நேரத்துக்குள் வெளியே போய் விட வேண்டுமென்று உத்திரவு.

மங்களூரில் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தியதற்காக ஐவர் கைதியாயினர்.

காங்கிரஸ் முகாம் இருப்பதாகச் சந்தேகித்து 'தாஜ் மகால்' ஹோட்டலை போலீசார் சோதனையிட்டு ஏ. கே. கோபாலனுக்குச் சொந்தமான ஒரு பெட்டியை மட்டும் எடுத்துச் சென்றனர்.

அலகாபாத்தில் காந்தி தினம் கொண்டாடப்பட்டதன் சம்பந்தமாக ஊர்வலம் நடத்தியதற்காக 8 தொண்டர்கள் கைதியாயினர்.

டெல்லியில் 'சிவப்பு' துண்டுப் பிரசுரம் சம்பம்பந்தமாக 'அர்ஜுன்' பிரஸ்ஸை சோதனையிட்டு இங்கிலீஷ் அச்சுகளடங்கிய 83 பெட்டிகளையும் பறிமுதல் செய்து, உதவி ஆசிரியரையும் கைது செய்திருக்கின்றனர்.

பம்பாயில் கைதியான காங்கிரஸ்காரர்களில் 11 பேருக்கு இரண்டு வருஷ காலத்துக்கு நகரத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதென உத்திரவு. காங்கிரஸ் துண்டுப் பிரசுரங்களைத் தயார் செய்து கொண்டிருந்ததாக 6 பேரும் காந்தி தின சம்பந்தமாக கூட்டம் நடத்திய போது இருவரும் கைது செய்யப்பட்டனர். போலீசார் ஒரு வீட்டைச் சோதனையிட்டு 6 டைப் அடிப்பவர்களையும் கைது செய்து, மெஷின், பேப்பர் முதலியவைகளையும் கைப்பற்றினர்.

அனுர்க்கலியில் ஊர்வலம் சென்றதில் கைதியான தொண்டர்களில் மூவருக்கு இரண்டு முதல் நான்கு மாதங்கள் வரையில் தண்டனை.

கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் காரியாலயத்தை போலீசார் சோதனையிட்டதில் ஒரு சைக்ளோஸ்டைல் மிஷினும், சில துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன. இருவர் கைதியாயினர்.

கல்கத்தாவில் நடைபெற விருக்கும் காங்கிரஸுக்கு வரவேற்புக் கமிட்டித் தலைவராக டாக்டர் பிரபல கோஷ் என்பவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அங்கத்தினர்களும் சேர்ந்து வருகின்றனர்.

காரைக்குடியில் தீண்டாமை விலக்குச் சம்பந்தமாக நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் போலீஸார் தலையிட்டு பிரசங்கம் செய்துகொண்டிருந்த ஜீவானந்தத்தையும் மற்றும் சிலரையும் நன்றாக அடித்து ஸ்டேஷனுக்கு இழுத்துக்குச் சென்ற பிறகு 'நியூசன்ஸ் சார்ஜ்' செய்திருப்பதாகக் கூறி விடுவித்தனர்.

காளஹஸ்தியில் சில தெருக்களுக்கு 'ஹரிஜனத் தெரு' 'ஹரி ஜனப் பேட்டை,' 'நந்தனார் தெரு,' 'ஹரிஜன பாளையம்' என்று பெயரிட வேண்டு மென்று பஞ்சாயத்தைக் கேட்டுக் கொள்வதெனத் தீர்மானித்திருக்கிறார்கள்.

ரத்தினகிரியில் இரண்டு, காண்டிவாலில் ஒன்று, ஆலப்பிழையில் ஒன்று, பெரட்டுவில் ஒன்று மட்டஞ் சேரியில் ஒன்று, வானப்பள்ளியில் ஒன்று, அரியூரில் ஒன்று பள்ளுருத்தியில் ஒன்று விதம் கோவில்கள் ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டிருக்கின்றன.

ஜெர்மனியில் நடந்த பொதுத் தேர்தலில் நாம் சங்கில் எதிர் பார்த்தது போலவே நாஸிக்கள் தான் பெரும்பான்மையில் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

ஜகோலே ஜப்பானியர்கள் பிடித்துக் கொண்டனர். சீனப் படைகள் பலவிடங்களிலும் ஓடுகின்றனராம். சீன சேனாதிபதியும் ஓடிவிட்டதால் அதிகாரிகள் அவரைப் பிடித்துக் கைதி செய்ய உத்திரவிட்டிருக்கின்றனராம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane Madras